3. அறிக்கை அளித்தல்.

விதி 107 (1)-ன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை 107-ஆம் விதியின் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினை அவை முன்னவர் அவர்கள் அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்ட மன்றப் பேரவை 107 ஆம் விதியின் கீழ் திருத்த அறிக்கை ஒன்றினை இப்பேரவையின் முன் வைக்க முற்படுகிறேன்.

1982—83 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது நான் 26—2—1982 அன்று ஆற்றிய தமிழ் உரையில் கீழ்க்கண்ட திருத்தங்களை அறிவிக்கிறேன் :—

(அ) பக்கம் 61 (பாரா 110) கீழிலிருந்து 7 ஆவது வரியில் ''ரூபாய் 42·70 கோடி'' என்பதை ''ரூபாய் 42·07 கோடி'' என்றும் ;

(ஆ) பக்கம் 70 பாரா 117 (ஏ)-ல் ''விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக'' என்பதை'' விற்பனை வரி 6 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக ''என்றும் ;

(இ) பக்கம் 72 பாரா 121ல் 9 ஆவது வரியில் ''அனைவர்'' என்பதை ''ஏழைகள்'' என்றும் திருத்திக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

(அ) மின்சார விநியோகம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை, போளூர் பகுதிகளில் மின்சாரம் வராமல் பல்லாயிரக் கணக்கான......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.